**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.**

**முன்னிலை:– திருமதி R.D. குருலட்சுமி,** M.A.,M.L., PGDI & CL.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.

திருவள்ளுவர் ஆண்டு 2055 குரோதி வருடம் கார்த்திகை திங்கள் 25–ம் நாள்

2024 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10 ஆம் நாள் செவ்வாய்கிழமை

இடைநிலை மனு எண்.3/2024

இன்

அசல் வழக்கு எண்.32/2018

(CNR.No.TNTR21-000033-2018)

...

அமீர் சாகிப் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர்
2. வருவாய் கோட்டாட்சியர், திருத்தணி
3. வட்டாட்சியர், திருத்தணி ... 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3 பிரதிவாதிகள்

4.கோபி
5. வெங்கடாசலபதி
6. ராதாகிருஷ்ணன்
7. வாசு
8. நாகராஜ் ... 4 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/ 4 முதல் 8 பிரதிவாதிகள்

(4 முதல் 8 எதிர்மனுதாரர்கள், அவர்களுக்காகவும் ஜாகீர்மங்களம் கிராம மக்களுக்காகவும் பிரதிநிதித்துவம் செய்கிறார்கள்)

இம்மனு கடந்த 26.11.2024 ம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் A. ஃபசுரூல்லாக் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.K.L.ஜெயபிரகாஷ் அவர்கள் முன்னிலையாகியும், 4 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் C.A. நடராஜன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இருதரப்பு வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

வழக்கு சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு, வட்ட நில அளவையார் உதவியுடன் அளவீடு செய்து, இயற்கை அமைப்பு, அதன் நான்கு எல்லைகள் மற்றும் வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்:–**

புல எண்.156/2 விஸ்தீரணம் 43 செண்ட் நிலத்தில் கருவேல மரங்கள் வைத்து வளர்த்து, வெட்டி வாதி அனுபவித்து வருகிறார். புல எண்.156/1ல் கால்நடைகள் வளர்த்து, கூரை அமைத்து வாதி அனுபவித்து வருகிறார். புல எண்.156/1ன் மத்தியில் பள்ளிக்கூடம், நியாயவிலை கடை, பஞ்சாயத்து அலுவலகம் கிராமத்தாரரின் வேண்டுகோளின்படி சில காலம் முன்பு கட்டப்பட்டது. வழக்கு சொத்து 07.04.1988ம் தேதி முதல் இன்றுவரை மனுதாரரின் அனுபவத்தில் இருந்து வருகிறது. பட்டா எண்.202ல் உள்ள பள்ளிக்கட்டிடம், நியாயவிலைகடை, பஞ்சாயத்து கட்டிடம் தவிர பள்ளிக்கட்டிடத்தில் வழக்கிற்கு பின்பு சுற்றுசுவர் கட்டப்பட்டது. பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் பொய்யான விவரங்களை அளித்துள்ளனர். நீதிமன்ற ஆணையர் நியமனம் வழக்கிற்கு மிகவும் அவசியம். எனவே நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>1 முதல் 3 எதிர்மனுதாரர்களின் மறுப்புரையின் சுருக்கம்:–</u>**

(அ) வழக்கு சொத்து வாதிக்கு உரிமை பாத்தியம் என்பதும், சொத்தின் உரிமையாளரான சுப்பிரமணியிடமிருந்து 07.04.1988ம் தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெற்று அனுபவித்து வந்தார் என்பதும் பொய். வாதியின் கிரையதாரருக்கு வழக்கு சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை மற்றும் வழக்கு சொத்தின் அனுபவத்தில் இருந்ததும் இல்லை. வழக்கு சொத்தில் அரசு ஆரம்ப பள்ளி, கிராம நிர்வாக அலுவலகம், பஞ்சாயத்து அலுவலகம், குழந்தைகள் பராமரிப்பு நிலையம் ஆகியவை உள்ளன. வேண்டுமென்றே வாதி இந்த உண்மையை மறைத்துள்ளார்.

(ஆ) வழக்கு சொத்தின் அனுபவத்தில் வாதி ஒருபோதும் இருந்ததில்லை. எனவே வாதி உரிமைகோர முடியாது. தாவா உரிய தரப்பினர் சேர்க்காத தோஷத்திற்கு உள்ளாகியுள்ளதால், வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும். தாவாவில் கோரியுள்ள பரிகாரம் தவறானது, அது வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல. வாதி செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது. வழக்கில் கூறியுள்ள

வியாஜியமூலம் கற்பனையானது. எனவே வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. 4 முதல் 8 எதிர்மனுதாரர்களின் மறுப்புரையின் சுருக்கம்:–

(அ) புல எண்.156/2ல் 43 செண்டில் கருவேல மரங்கள் வைத்து வளர்த்து வருவதாகவும், புல எண்.156/1ல் இன்றுவரை பள்ளிக்கூடம், நியாயவிலை கடை, பஞ்சாயத்து கட்டிடங்கள் தவிர மீதி இடம் மனுதாரரின் அனுபவத்தில் இருப்பதாகவும் கூறியுள்ளது முற்றிலும் சரியல்ல. இயற்கை அமைப்புகளையும், இதர அமைப்புகளையும் காட்டும் பொருட்டு பொய்யான வாதுரைகளின் அடிப்படையில் இம்மனு தாக்கல் செய்திருப்பது சரியல்ல. மொத்த சொத்தும் அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டு ஆரம்ப பள்ளிக்கூடம், நீர்தொட்டி, நியாயவிலை கடை, பஞ்சாயத்து கட்டிடம், கிராம நிர்வாக அலுவலகம் ஆகியவைகள் புல எண்.156/1ல் கட்டப்பட்டு, புல எண்.156/2 முழுவதும் பள்ளி விளையாட்டு மைதானமாகவும் சுற்றுசுவரும் உள்ளது.

(ஆ) வாதி எந்த காலத்திலும் அனுபவத்தில் இல்லை. விளம்புகை கோராமல் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அனுபவத்தை காட்ட நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைநிற்கதக்கதல்ல. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. தீர்வுக்குரிய பிரச்சனை:–

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. தீர்வு:–

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்குசொத்தின் இயற்கை அமைப்பை அளந்து பார்க்க வேண்டியது மனுதாரருக்கு அவசியம் என்றும் எனவே மனுவை அனுமதிக்க கோரி வாதிடப்பட்டது. பள்ளிக்கூடம், நியாயவிலை கடை, குடிநீர் தொட்டி, பஞ்சாயத்து அலுவலங்கள் புல எண்.156/1ல் கட்டப்பட்டு, அரசால் வெகுகாலமாக மேற்படி சொத்து அனுபவித்து வரப்படுகிறது என்றும் வாதி எந்த காலத்திலும் புல எண்.156/1ல் அனுபவத்தில் இல்லை என்றும், புல எண்.156/2ல் பள்ளிக்கூட விளையாட்டு மைதானம் உள்ளது என்றும், நிரந்தர உறுத்துக் கட்டளை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் அனுபவத்தை காட்ட நீதிமன்ற ஆணையர் நியமனம் கோர இயலாது என எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது.

6. அசல் வழக்கானது 25.10.2019 ம் தேதியிட்டு விசாரணை பட்டியலில் இடப்பட்டு, வாதி தன்னை 20.01.2021 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு, 12.08.2022 ம் தேதி வா.சா.1 குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, வாதி தரப்பில் 23.07.2024 ம் தேதி வா.சா.2 விசாரணை செய்யப்பட்டு, கூடுதல் சாட்சி விசாரணைக்காக நிலுவையில் இருந்த நிலையில் வாதி தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், தாவா சொத்தின் அனுபவத்தை நிரூபணம் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் கோர இயலாது என பல்வேறு மாண்பமை உச்ச நீதிமன்ற, உயர்நீதிமன்ற தீர்ப்புகளில் கூறியுள்ள நிலையில் மனுதாரரின் இம்மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும் மனுதாரர் வேண்டுமென்றே நீதிமன்ற நடவடிக்கைகளை காலங்கடத்த வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, இம்மனு எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10 ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறியப் பகரப்பட்டது.

Sd/– R.D. Gurulakshmi
10.12.2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

Sd/– R.D. Gurulakshmi
10.12.2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.